O.S. 1/2018

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:05.03.2025

PW1:ஸ்ரீராம் த/பெ– (லேட்)ராஜரத்தினம்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனக்கு வழக்கு விபரம் தெரியும். நான் தான் வழக்கு தாக்கல் செய்ய வழக்கு விபரங்கள் சொன்னேன். வழக்கு தாக்கல் செய்யும் போது 1ம் பிரதிவாதியை மட்டும் தான் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு மேலும் 2 சகோதரிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ராஜரத்தினத்துடன் 1ம் பிரதிவாதி உடன் பிறந்தவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு உடன் பிறந்த 2 சகோதரிகள் உண்டு என்றால் சரிதான். அவர்களை வழக்கு தாக்கல் செய்யும் போது தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை ஏன் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று கேட்டால் எங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை என்பதால் அவர்களை சேர்க்கவில்லை. என் தகப்பனாருடன் பிறந்த 2ம் பிரதிவாதியை தன்னையும் தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்து இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4ஐ என் தகப்பனார் தாக்கல் செய்திருந்த வழக்கில் இருந்து நகல் பெற்று தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். என் தகப்பனார் திண்டுக்கல், சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.298/2012 என்ற வழக்கில் வா.சா.ஆ.4ஐ தாக்கல் செய்திருந்தார். என் தகப்பனார் அதில் ஜெராக்ஸ் நகலை தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் அசல் தாக்கல் செய்திருந்தார். பிராதில் வா.சா.ஆ.4ன் அசல் 1ம்

பிரதிவாதியிடம் இருப்பதாகவும், அதை நாங்கள் கேட்டும் கொடுக்க மறுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் பாகப்பத்திரத்தின் அசல் 1ம் பிரதிவாதியிடம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அவர் வசமிருந்த அசலை கொடுக்க மறுத்தார், எங்கள் வசம் இருந்த மற்றொரு அசலை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ல் உள்ள சொத்துக்கள் என் தாத்தா மற்றும் பாட்டிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்து என்பது வீடு. சர்வே எண்.251/6 வீட்டின் வட பகுதி தாவா சொத்து ஆகும். எனது தாத்தாவும் அவரது உடன் பிறந்த சகோதரர் ராமசாமியும் செய்து கொண்ட பாகப்பிரிவினையின் படி சர்வே எண்.251/6 ல் உள்ள வீடு எனது தாத்தாவின் பாகத்திற்கு கிடைத்தது. அந்த முழு வீட்டையும் எனது தாத்தா தான் அனுபவம் செய்து வந்தார். அவர் இருக்கும் வரை அவர் தான் வரி வகையறா செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல, எனது தகப்பனார் 1992 ல் இருந்து செலுத்தி வந்தார். 1ம் பிரதிவாதி ஊரில் இல்லாத சமயத்தில் எனது தகப்பனார் பெயரில் வரி செலுத்தி ரசீதுபெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் மேற்படி வீடு எனது தாத்தா பெயரில் தான் உள்ளது என்றால் பட்டா எனது தாத்தா பெயரில் உள்ளது. பட்டா யார் பெயரில் உள்ளதோ அந்த பெயருக்கு தான் வரி செலுத்த வேண்டும் என்றால் தாத்தா உயிருடன் இருக்கும் போதே அவரது அனுமதியுடன் எனது தகப்பனார் வரி செலுத்தி வந்தார். வா.சா.ஆ.4 18.12.1991 ல் எழுதப்பட்டது. அது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் அப்போது பிறக்கவில்லை. வா.சா.ஆ.4 ல் உள்ள சரத்துக்கள் பற்றி எனது தகப்பனார் இறந்த பின்பு எனக்கு தெரிய வந்தது. எனது தகப்பனார் 2017 ல் காலமானார். வா.சா.ஆ.4 ல் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் மொத்தம் 4 சொத்துக்கள் உள்ளது. வா.சா.ஆ.4 ல் உள்ள மற்ற

சொத்துக்களையும் நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். வா.சா.ஆ.4ன் படி எனது தகப்பனார் திண்டுக்கல், சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.137/2017 வழக்கு தாக்கல் செய்திருந்தார். எனது தகப்பனார் தாவா சொத்து சம்மந்தமாக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.137/2017 ன் பிராது நகல், தீர்ப்பு இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.4ல் கண்ட சொத்துக்கள் சம்மந்தமாக எனது தகப்பனார் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 சம்மந்தமாக எனது தகப்பனார் சொல்லி தெரிந்து கொண்டேனா என்றால் அவர் இறந்த பின்பு வழக்கு மூலமாக தெரிந்து கொண்டேன். எனது தாத்தா கோபாலகிருஷ்ணன் சர்வே எண்.251/6 வீடு சம்மந்தமாக செட்டில்மெண்டு ஆவணம் எழுதி எனது தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தபால் மூலமாக அனுப்பினார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அதை பெற்றுக்கொண்டு அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அ.வ.எண்.298/2012 வழக்கில் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அ.வ.எண்.298/2012 வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான், நாங்கள் அதன் மீது மேல்முறையீடு எண். 70/2018 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த எண்ணில் திண்டுக்கல், மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு எதுவுமில்லை என்றால் சரியல்ல. அதன் உண்மையான எண். 137/2017 என்றால் அது எனது தகப்பனார் போட்ட வழக்கு அவர் இறந்த பின்னர் மேல்முறையீடு எண். 70/2018 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 137/2017 வழக்கு நிலுவையில் இருக்கும் போதே எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் மனு தாக்கல் செய்து அதில் தரப்பினராக சேர்க்கப்பட்டோம் என்றால் என் தகப்பனார் இறந்த பிறகு அந்த

வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் 1ம் பிரதிவாதி இறுதிநிலை தீர்ப்புக்காக மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. அ.வ.எண்.298/2012 வழக்கில் எனது தகப்பனார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனாருக்கு பாதியும், 1ம் பிரதிவாதிக்கு பாதியும் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம் என்று சொல்லியுள்ளார் என்றால் அந்த தீர்ப்பாணை தவறு என்று மேல்முறையீடு செய்துள்ளேன். அந்த தானசெட்டில்மெண்ட் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை என்பதால் நான் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என்று சொல்லியுள்ளார் என்றால் அந்த தீர்ப்பாணை தவறு என்று மேல்முறையீடு செய்துள்ளேன். அதனால் அந்த வழக்கு 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் அந்த தீர்ப்பாணை தவறு என்று மேல்முறையீடு செய்துள்ளேன். வா.சா.ஆ.4 சம்மந்தமாக எனது தகப்பனார் எந்த நடவடிக்கையும் காலாகாலத்தில் எடுக்காததால் அதை தற்போது நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க முடியாது என்றால் சரியல்ல. ஏற்கனவே வா.சா.ஆ.4 சம்மந்தமாக திண்டுக்கல், சார்புநீதிமன்றத்தில் ஏற்கனவே தீர்ப்பளிக்கப்பட்டதால் இவ்வழக்கு சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல அவர் தான் பத்திரத்தை வாங்கி எழுதிக்கொடுத்தார்.1ம் பிரதிவாதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அலுவலராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் கண்ட சொத்துக்களில் எனது தகப்பனாருக்கோ, 1 ம் பிரதிவாதிக்கோ அது எழுதப்பட்ட காலத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியமே இல்லாத சொத்தை பொறுத்து அவர்கள்

எந்த வித ஆவணமும் ஏற்படுத்தி கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.4 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் நாங்கள் ஆட்சேபித்து மனு கொடுத்தும் அதை மீறி இணைப்பு கொடுத்துள்ளார்கள். அவர் பாக வீட்டிற்கு அவர் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண்.251/6 ல் நாங்கள் குடியிருக்கும் பகுதி காரைவீடு. எனது தாத்தா தானசெட்டில்மெண்டு எழுதிய காலத்தில் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி குடியிருக்கும் பகுதி கூரைவீடாக இருந்தது என்றால் சரியல்ல. சர்வே எண்.251/6 என்பது மொத்தம் 1496 சதுர அடி என்றால் சரிதான். அதில் எனது வீடு 635 சதுர அடி என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் பகுதி எவ்வளவு பரப்பு என்று கேட்டால் 1991 பாகப்பத்திர படி 1ம் பிரதிவாதி குடியிருக்கும் வீடும் எங்களுக்கு பாத்தியப்பட்டதாக வழக்கு தொடர்ந்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு கூரைவீடு என்பதால் அவருக்கு 838 சதுர அடி ஒதுக்கப்பட்டது என்றால் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, பாகப்பத்திர படி உரிமை கோரியுள்ளோம்., எந்த பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 18.12.1991 பாகப்பத்திரத்தின் படி தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வா.சா.ஆ 4 ஐ தவிர வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் வீட்டு வரி ரசீதும், தண்ணீர் வரி ரசீதும் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.4 சட்டப்படி செல்லாது என்றும், அது சம்மந்தமாக ஏற்கனவே வேறு வழக்கில் தீர்ப்பாகியுள்ளது என்பதால் அது சம்மந்தமாக நான் வேறு வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. 20.07.2012ம் தேதியன்று எனது தாத்தா தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு

தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த பத்திரத்தின் படி தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்ககதல்ல என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாதாததால் 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பெற்றது)